## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.42/2024

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 10.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தனபால் (PW–1 ) | வயது | : | 58/2026 |
| க/த பெயர் | : | திரு. கனகசபை | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | நெம்மேலி | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 1ம் வாதியாவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறிப்பு | குறியீடு விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 07.04.1992 | 1வது வாதியின் தகப்பனார் கனகசபைக்கு குடியிருப்பு பட்டா தொடர்பாக நத்தம் நில அளவை துணை ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 06.07.2021 | வழக்கு சொத்திற்கு கனகசபை பெயரில் உள்ள சிட்டா | நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 06.01.2024 | வாதிகளின் வாரிசு சான்று | அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 21.11.2023 | வழக்கு சொத்திற்கு 2வது வாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீது | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 22.03.2024 | வழக்கு சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு கனகசபை | அசல் | வா.சா.ஆ.5 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெயரில் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது | | |
| 6 | 24.07.2023 | வழக்கு சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு கனகசபை பெயரில் மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீது | அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 27.07.2023 | 1வது எதிர்வாதியால் வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.7 |
| 8 | 02.08.2023 | வாதிகள் தரப்பில் 1வது எதிர்வாதிக்கு கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.8 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.10 16:56:51 +0530

District Munsif
Mannargudi.